REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 9உ சனி (22—1—55) ★ ★ வெளியூர்: தை 10உ ஞாயிறு (23—1—55) [இதழ் 189

ஆலயங்களும் ஆதிக்கச் சின்னங்களாகின்றன!

சென்னை, ஜன. 22—

"புராதனச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்ட"த்தின்கீழ், தென்னாட்டில் உள்ள சில முக்கியமான கோவில்களின் நிர்வாகத்தை இந்தியப் பேரரசே மேற்கொள்ளத் திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது.

மத்திய ஆட்சியின் நேரடி நிர்வாகத்திற்கு வரக்கூடிய கோவில்களில் சிதம்பரம் நடராஜர் கோவில், மதுரை மீனாட்சி கோவில், இராமேஸ்வரம் இராமநாதர் கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில், சீரங்கம் அரங்கநாதர் கோவில் முதலியவைகளாம். ஆந்திராவில் இருக்கும் வெங்கடேஸ்வரர் கோவில் நிர்வாகத்தையும் இந்திய சர்க்கார் மேற்கொள்ளுமாம்.

'திராவிடத்தை ஒதுக்கி தள்ளாதே'

கலப்பு மணம் செய்துகொள்ள குஜராத்தி இளைஞர்கள் தீர்மானம்

பெற்றோர்களின் பரிதவிப்பு

அகமதாபாத், ஜன. 21—

குஜராத்தின் வடக்குப் பகுதியில் உள்ள உயர் ஜாதி இந்துக்கள் என்ற வகுப்பினர்களின் இளைஞர்கள் பலர், நாட்டில் சமத்துவம் ஏற்பட்டு, மக்களிடையே காணப்படும் சமூக இழிவுகள் நீக்கப்பட வேண்டுமென்று மிகவும் தீவிரமாக வேலை செய்கிறார்களாம்.

இப்படிப்பட்ட இளைஞர்களில் ஏராளமானவர்கள், தாழ்த்தப்பட்ட சமூகப் பெண்களையே மணக்கப் போவதாகக் கூறியுள்ளனர். இளைஞர்களின் இந்த முடிவைக் கண்டு அவர்களின் பெற்றோர், 'ஆசாரம் அழிகிறதே' என்று அலறித் துடிக்கிறார்களாம்.

கலப்புத் திருமணம் செய்வது, வேற்றுமையற்ற விருந்துகள் ஏற்பாடு செய்வது போன்ற நிகழ்ச்சிகளினால் பலதரப்பட்ட வகுப்பாருக்கிடையேயுள்ள பேதத்தை ஒழிக்க அந்த இளைஞர்கள் முனைந்து நிற்கிறார்களாம். உணவிலும், திருமணத்திலும் சமத்துவம் வேண்டுமென்று அவர்கள் கோஷமிடுகிறார்களாம்.

தாழ்த்தப்பட்ட சமூகப் பெண்களையே திருமணம் செய்து கொள்ள இளைஞர் பலர் செய்துள்ள முடிவைக்கண்டு, உயர் ஜாதி எனப்படுவோரில் இளம் பெண்களை உடைய பெற்றோர் வருத்தமுற்றிருக்கிறார்களாம்.

தோழர் எம்.எஸ். பெரியசாமி மறைவு

விருதுநகர், ஜன. 21—

விருதுநகர் நகரசபை தலைவரும் திராவிட மக்களின் உற்ற துணைவருமான தோழர் எம். எஸ். பெரியசாமி (நாடார்) அவர்கள் இன்று தனது இல்லத்தில் இயற்கை எய்திய தைக் கேட்டு வருந்துகிறோம்.

தோழர் எம். எஸ். பெரியசாமி அவர்கள் தனது வாழ்நாளில் காங்கிரஸ் எதிர்ப்பாளராக இருந்து திராவிடர்களின் நல்வாழ்வுக்காக உழைத்தவர்.

விருதுநகரின் உயர்வுக்கு தற்போது முக்கிய காரணமாக விளங்கும் செந்திக்குமார் கல்லூரியை அமைக்க, அவர், பாடுபட்டவர் என்பது அனைவரும் அறிந்ததாகும்.

அவரது மறைவினால் வருந்தும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வடவர் ஆட்சிக்கு அம்புஜம்மாள் எச்சரிக்கை!

"தென்னாட்டுக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை"— ஆவடியில் உரிமைக் குரல் கேட்கிறது!

"பெரிய தொழிற்சாலைகளை இம்மாநிலத்திலும் ஆரம்பித்துவைக்க முனையுங்கள்"

நிலைமையைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளுமாறு வேண்டுகோள்

ஆவடி காங்கிரஸ் நேரு சர்க்காரின் ஓரவஞ்சனையை எடுத்துக்காட்டுகிறது

"தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது; காங்கிரஸ் சர்க்காரில் வட நாட்டிற்கே அதிக சலுகை தரப்படுகிறது; நேருவின் தலைமையில் நடைபெறும் சர்க்கார் ஓரவஞ்சனையுடன் நடந்துகொண்டு, பெரும் திட்டங்களையெல்லாம் வட நாட்டிலேயே நிறைவேற்றி, தென்னாட்டை அலட்சியப்படுத்துகிறது," என்ற உண்மையை நாம் நீண்ட காலமாக எடுத்துச்சொல்லி வருகிறோம்.

நமது கூற்றில் உண்மை நிரம்பிக் கிடப்பது கண்டும், அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள மனமின்றியோ, அல்லது 'மத்திய பீட'த்தின் மீதுள்ள பக்தியின் காரணமாகவோ, சென்னை அரசாங்கம் இந்த உண்மையை இதுவரை மறைத்துவந்திருக்கிறது.

இப்போது ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டில் வட இந்தியத் தலைவர்களின் முன்னிலையில், 'நேரு சர்க்கார் சென்னையை எல்லாத் துறைகளிலும் ஒதுக்கித் தள்ளுகிறது,' என்பதை மறைமுகமாக எடுத்துக்காட்டி,—"கோபிக்காதீர்கள்—கொஞ்சம் எங்கள் கோரிக்கையைக் காது கொடுத்துக் கேளுங்கள்" என்று கூறியிருக்கிறார்—காங்கிரஸ் மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்ற வரவேற்புக் குழுத் தலைவி அம்புஜம்மாள் அவர்கள். அவர் கூறியதாவது:—

"பெரிய பெரிய தொழிற்சாலைகளும், வேலைத் திட்டங்களும் உருவாக்கப்படுவதில், இந்த மாநிலத்திற்கு உரிய பங்கு கிடைக்கவில்லையே என்ற ஓர் அபிப்பிராயம், எங்களுக்கிடையே நிலவி வருகிறது; இதை இங்கே குறிப்பிடுவது என் கடமையாகும்; தேசியத் திட்டங்களில் இடம் பெறுகின்ற பெரிய தொழிற்சாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள் முதலியன அதிக அளவில் தென்னாட்டிலும் இடம் பெற வேண்டுமென்பது எங்கள் பேரவா; இதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்; இப்போது மத்திய சர்க்கார் வகுத்துள்ள நெய்வேலித் திட்டம், இந்த மாநில மக்களின் ஆசையை ஓரளவு பூர்த்தி செய்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

35,000 துறைமுகத் தொழிலாளர் வெற்றி

கோரிக்கைகளுக்கு முதலாளிகள் பணிந்தனர்

கல்கத்தா, ஜன. 21—

கடந்த 13 நாட்களாக கல்கத்தாவில் கோரிக்கைகள் பலவற்றிற்சாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த 35,000 உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்துத் தொழிலாளர்கள், இன்று தங்கள் கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றை கப்பல் கம்பெனிகள் ஏற்றுக்கொண்டதை ஒட்டி, வேலை நிறுத்தத்தை நிறுத்திக்கொண்டனர் எனத் தெரிகிறது.

"பின்தள்ளப்பட்ட மக்களின் மனப்போக்கு மாறவேண்டும்"

"தங்களிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும்"

"இவ்விடுத்தப் போக்கு இல்லாமையே அவர்கள் முன்னேறுததற்குக் காரணம்"

மாநில பின்தள்ளப்பட்ட மக்களின் மாநாட்டின் சிறு விவரம்

"பின்தள்ளப்பட்ட சமுதாய மக்கள், தங்களுடைய மனப்போக்கை முழுதும் கட்டாயமாக மாற்றிக்கொள்ள வேண்டும். முன்னேறியுள்ள சமுதாய மக்களிடமிருந்து சமூக நீதி கோரும் பின்தள்ளப்பட்ட சமுதாய மக்கள், அதே நீதியை, தங்களிலும் கீழான நிலையில் தள்ளப்பட்டிருக்கின்ற மக்களுக்கு வழங்க வேண்டும்."

—கே. நஞ்சுண்டையா

"தங்களுடைய நியாயமான உரிமைகளைக் கோருகின்ற அதே நேரத்தில், தங்களிலும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறவர்களையும், பின்தள்ளப் பட்ட மக்கள் சமத்துவமாக நடத்த வேண்டும். பிறரிடமிருந்து தங்களுக்குப் பெற விரும்பிய அதே நீதியை, அவர்களிடமிருந்து கோரிய மற்றவர்களுக்கு அவர்கள் வழங்கத் தயாராக இல்லாததே, பல ஆண்டு காலமாக பின்தள்ளப்பட்ட மக்கள் முன்னேற்றம் அடையாததற்கான காரணங்களில் ஒன்றாகும்."

"அரசியலில் நுழைந்தாலல்லாது தங்களுக்கு விமோசனம் பிறக்காது என்று பலர் அழுத்தந்திருத்தமாகக் கருதியுள்ளனர். பின்தள்ளப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ அரசியலில் கலப்பதை வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், பின்தள்ளப்பட்ட சமுதாய மக்கள் சங்கம், ஒரு அரசியல் சார்பற்றதாக இருக்க வேண்டும்."

"சமுதாயப் புரட்சி சென்னையில் உருவாக்கப்பட்டு வடக்கில் பரவியது என்பதுதான் உண்மையாகும். வடக்கிலிருந்ததைக் காட்டிலும் தெற்கில் சமூகக் கொடுமை கடுமையாகக் கையாளப்பட்டதே இதற்குக் காரணமாக இருக்கலாம்."

—டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக்

"அரசியலில் ஜாதியைப் புகுத்தக் கூடாது."

—நிலவரி அமைச்சர் எம்.ஏ.மாணிக்கவேலு நாயகர்

(4-ம் பக்கம் பார்க்க.)

அமைச்சர்களுக்கு அரசாங்கச் செலவில் கார் தரக்கூடாது

மாநில அரசாங்க மந்திரிகளுக்கு சர்க்கார் செலவில் இலவசமாக கார் வழங்குவது கூடாது என்றும் மத்திய அரசாங்க மந்திரிகளைப் போல், மாநில அரசாங்க மந்திரிகளும் தங்கள் சொந்தச் செலவில் கார் வாங்கிக் கொள்ளவேண்டும் என்றும், தேவைப்பட்டால், அலுவலர்களுக்காகவென்று உள்ள கார்களை, சர்க்கார் அலுவல்களை கவனிக்கச் செல்லுகையில் மட்டும் உபயோகிக்கலாம் என்றும் இந்திய தேசியக் காங்கிரசின் ஆக்கவேலைக் குழுவினர் தீர்மானம் ஒன்றைச் சிபாரிசு செய்துள்ளனர் எனத் தெரிகிறது.

ஆவடி மாநாட்டில் இது ஒரு மிக முக்கியமான விஷயம் என்று கருதப்படுகிறதாம்.

தேசியத் திட்டக் கடனுக்கு மொத்தம் ரூ. 157 கோடி வசூலாகியுள்ளது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 22—1—1955 சனி

என்ன செய்யப்போகிறார்கள்?

"வேலையில்லை — அதனால் வாழ வழியில்லை; வாழும் வழி கூறுவோரும் எவருமில்லை; என்ன செய்வேன்—ஏழை நான்; எங்கு செல்வேன்; ஏனென்று கேட்பார் எவருமில்லையே! ஏங்கித் தவிக்கிறேன்! இறந்துதான் வாழ வேண்டுமா? என் மான உணர்வை மறந்து, அந்த ஈனச் செய்கையில் இறங்கத் துணிவு கொள்வதற்கு, அறிவு இடந் தர மறுக்கிறதே!"

"வேலையில்லை—அது பெற்றெடுத்த 'வறுமை'யின் கோரத் திருவிளையாடல், என் வாழ்வை உருக்குலைத்து விட்டது! எத்தனை நாள், சோற்றுக்கு மாற்றாகக் காற்றும், ஆற்று நீரும் என் பசியைத் தீர்க்கும்? வேறு மாற்றமே இல்லையா என் வாழ்வில்?"

"வறுமை செய்த கொடிய வினையால், கொன்று தீர்த்தேன்—என்னை ஈன்றெடுத்த அன்னையை; வேறு என்ன செய்யச் சொல்கிறீர் என்னை—என் தாயைக் கொல்வதைத் தவிர?"

"பெற்றெடுத்த அன்னையைக் கொல்வதைத் தவிர, வேறு ஏதேனும் செய்வதற்கு மார்க்கமில்லையா, உனக்கு?"

"ஆம்; மார்க்கமில்லை—அதனால்தான் கொன்றேன்."

"என்ன? வேடிக்கையாகயிருக்கிறதே!"

"வேடிக்கையல்ல — வேதனையாயிருக்கிறது எனக்கு; வேலையில்லை — வருமானமில்லை —வாழ முடியவில்லை— என்னைப் பெற்றெடுத்த அன்னையை, என்னால் வாழ்விக்க முடியவில்லை; வாழ்வு எங்களுக்குக் கிடைக்கவில்லை; வறுமையின் கோரப் பிடியில் சிக்கி, என் அன்னை அணு அணுவாகத் தேய்ந்துகொண்டிருப்பதைக் கண்டேன்; அங்குலக் கணக்கில் என் அன்னையின் கடைசி மூச்சு நெருங்கிக் கொண்டிருந்தது; மரணம், என் அன்னையை அணைத்துக்கொண்டு 'சாந்தி' அளிக்கக் காத்துக் கொண்டிருந்தது; சாவதானமாக அதன் அருகில் சென்று கொண்டிருந்த என் தாயை சாகாமல் தடுக்க என்னால்—அவளது அருமை மகனால் இயலவில்லை; என் செய்வேன்; பெருமையோடும், அருமையோடும் கழிய வேண்டிய தாயின் வயோதிகம், வறுமையோடும் சிறுமையோடும் போராடி மடிந்து கொண்டிருந்தது; என்னால் முடிந்ததா அதைத் தடுக்க? ஏழை நான்—யாரைக் கடிந்து கொள்ள முடியும், இந்தக் கோரமான நிலைமைக்கு? ஒடிந்து போன எங்கள் 'வாழ்க்கை வண்டி'யை செப்பனிட்டுத் தருவதற்கு யார் முன் வருவர்? இடிந்துபோன என் உள்ளம், 'சாவு கொடியதுதான்; ஆனால், அணு அணுவாய் சித்திரவதை செய்யப்பட்டு சாவைச் சந்திப்பதைவிட, ஒரே நொடியில், அதன் பிடியில் சிக்கிவிட்டால் சங்கடம் குறையும்—சஞ்சலம் ஒழியும்,' என்று என்னைத் தூண்டியது; சம்மதம் கேட்டேன் பெற்றவளிடம் — தந்தாள்—அவள் தலையைக் கொய்தேன்; பின்பு நானும் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தேன்; அது தவறா? தவறா?"

"படித்தேன் — பட்டம் பெற்றேன்; பகட்டான வாழ்வு கிடைக்குமென்று நம்பினேன்; ஆனால், ஆண்டுகள் பலவாகியும், 'வேலை இல்லை' எனும் வேதனை கீதம் தொடருகிறது; இந்த நிலையில், எத்தனை நாள்தான் என் பெற்றோருக்குப் பெரும் பாரமாயிருப்பது? அவர்களும்தான் என்ன செய்வர்? 'பையன் படிக்கிறான்; இப்போது பணம் செலவாகத்தானே செய்யும்; நாளை, படித்து 'பாஸ்' செய்துவிட்டால், பாங்கான வேலை கிடைக்கும்; பத்து காசு சம்பாதிக்கமாட்டானா?' என்று அவர்கள் கொண்டிருந்த 'ஆசைக் கனவு'கள், கனவுகளாகவே இருந்தால், அவர்கள்தான் என்ன செய்வர்? ஏங்குகின்றனர்; என்ன செய்வேன்—குடும்பம் நடத்துவதற்கு அவர்கள் 'படும்பாட்டை' பார்த்துக் கொண்டேதான் இருந்தேன்; இனியும் பார்த்துக்கொண்டிருக்க என்னால் இயலாது; எங்கோ செல்லுகிறேன்; இன்று பட்டினி—நேற்றும் அப்படியே; இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்த நிலைமையை ஏற்றுக் கொண்டிருப்பது? படிப்படியாகச் சாவின் வாயிலை அடைவதைக் காட்டிலும், நொடியில் அங்கு செல்ல இதோ வழி—மரக்கிளை! மின்விசையின் ரயில்!"

இப்படி, 'வேலை இல்லை, வாழ்வில்லை, வாழ முடியவில்லை; வறுமையும், சிறுமையும் வாட்டுகின்றன; வாழப் பிறந்ததாகக் கூறுகிறார்கள்—நாட்டிலே; ஆனால், அந்த வாழ்வில் எங்களுக்குக் கிடைப்பதெல்லாம் பட்டினியும், பற்றாக்குறையும், பிணியும், சஞ்சலமும், சங்கடமும் தவிர வேறில்லை; வாழ்கிறோம் என்ற பெயரில் வாழ்விழந்து, வாழ வழியற்று, நடைப் பிணங்களாக உலவுகிறோம்; நாளை பிணமாவதினும் இன்றே அந்த நிலையை அடைவதே மேல்,' என்று வாழ்வின் எல்லைக் கோட்டிலே நின்று கொண்டு, 'வாழ்வில்லை—சாகிறோம்; வேலையில்லை-வீழ்கிறோம்; எங்கே எங்களுக்கு வாழ்வு—வாழ்வு' என்று ஓலமிட்டு ஓய்ந்த பின், பாய்ந்தோடும் மாநதி வெள்ளத்தில் வீழ்ந்தும், விஷமருந்தியும், தண்டவாளத்தில் தலையை வைத்தும், தாயைக் கொன்று, தானும் தற்கொலை செய்துகொள்வோர் பற்றிய செய்திகள் அலை அலையாய் வந்தவண்ணமுள்ளன—நாட்டிலே!

வேலையற்றோர் — அதனால் வேதனை அனுபவிப்போர் தொகை பெருகி வருவது, மக்கள் தொகைப் பெருக்கத்தைக் காட்டிலும் அதிகரித்து விட்டது.

அதே நேரத்தில், நாட்டை ஆளும் நல்லவர்கள், 'இதோ இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்; இன்னும் பத்தாண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் பறந்தோடும் பாரீர்—அதற்கான 'சோஷலிச' தீர்மானம் காணீர்—ஒத்துழைக்க வாரீர்!—என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

வேலையில்லாத் திண்டாட்டத்தால் வாடி வதங்கி, வாழ்விழந்து தவிக்கும் நிலை, சாதாரணமாக மனித உள்ளத்தால்—அது எதையும் தாங்கும் இதயமாயினுங்கூட— தாங்கிக் கொள்ள முடியாததாகும்; இந்த நிலை, மக்களை, 'எதையும்' செய்யத் தூண்டுவதும் இயற்கையாகும்.

அந்த நிலையில், "வேலையில்லை எங்களுக்கு — எங்கள் வேதனையை எடுத்துச் சொல்கிறோம்; இங்கே, ஐந்து இடங்களில் பூமிக்குக் கீழ், பண்படுத்தப்படாத இரும்புக் கனிகள் கிடக்கின்றன; அவற்றைத் தோண்டி எடுத்து, பண்படுத்தி, உருக்கி வார்க்கும் தொழிற்சாலை ஒன்றை இங்கு நிறுவினால், எங்களில் பலருக்கு வேலை கிடைக்கும்; வாழ்விழந்து தவிக்கும் எங்கட்கு வாழ்வதற்கு வழி பிறக்கும்; எங்கள் கோரிக்கையை மதித்து செயலாற்ற முனையுங்கள்; இல்லையேல், வேலை பெற, வாழ்வு பெற, அறப்போர் துவங்குவோம் — ஆட்சியாளருக்கு எதிராக," என்று கூறி, ஐதராபாத் மாநிலத்தில் உள்ள வேலையில்லாது தவிக்கும் பொது மக்கள் ஒன்று கூடி, மத்திய அரசாங்க தொழில் இலாகா மந்திரியாருக்கு கோரிக்கை ஒன்றைத் தந்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

"பூமிக்குக் கீழ் கருப்புத் தங்கம் இரும்புதோண்டப்படாமல் கிடக்கிறது; அந்தப்பூமியில் வாழும் நாங்கள், வேலையற்று—வாழ்விழந்து தவிக்கிறோம்; அதைத் தோண்டுகிற வேலையை எங்கட்குத் தந்தால், எங்கட்கும் வாழ்வு கிடைக்கும்—நாட்டிற்கும் பொருள் கிடைக்கும்—என்று கூறியிருக்கிறார்கள் ஐதராபாத் மாநிலத்திலுள்ள வேலையற்றோர்!

அப்படி தொழிற்சாலை அமைக்க அரசாங்கம் முன்வராவிட்டால் அவர்களைச் செய்யுமாறு தூண்டுவதற்கு அறப்போரில் ஈடுபடப்போவததாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இது, ஐதராபாத் மாநிலத்தில் நிலைமை!

சேலத்தை அடுத்த சேர்வராயன் மலைத்தொடரில் இரும்புக் கனிகள்; அங்கும், வேலையற்று—வேதனையால் விம்மும் நெஞ்சத்தவர் கொஞ்சமல்ல!

மேலும், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை நிறுவவேண்டும் என்ற கோரிக்கையைக் கேலியும் கிண்டலும் செய்திருக்கிறார் மத்திய மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

ஐதராபாத் வேலையற்றோர், வாழ்வு தேடிப் புறப்பட்டுவிட்டனர்! 'போர் புரிவோம்—வாழ்வு பெற,' என்று கூறியுள்ளனர்!

தமிழ் நாட்டில் வேலையற்றிருப்போர், என்ன செய்யப் போகிறார்கள்?

திறப்பு விழாக்களுக்கு மந்திரிகளையே அழைப்பது ஏன்?

வேறு அறிவாளிகளே இல்லையா?

பூனா நகரசபையினர் கட்டியுள்ள ஆரம்பப் பள்ளி ஒன்றினையும், அரிசன காலனி ஒன்றினையும் திறந்து வைப்பதற்கு யாரை அழைப்பது என்ற பிரச்சினை குறித்து காரசாரமான விவாதம் நடைபெற்றிருக்கிறது.

நகரசபை காங்கிரஸ்காரர்கள், பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாயை பள்ளியைத் திறப்பதற்கும், பின்தங்கிய வகுப்பிலாகா மந்திரி ஜி. டி. தபாசே என்பவரை அரிசனக் காலனியைத் திறப்பதற்கும் அழைக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்தனர்.

எதிர்க் கட்சியினர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து, வேறு இருவர் பெயரைப் பிரரேபித்திருக்கின்றனர்.

பிரபல கல்வி நிபுணரும், சமூக சேவகருமான பாபுராவ் ஜகதப் என்பவரை பள்ளியைத் திறக்கவும், டாக்டர் அம்பேத்காரை அரிசனக் காலனியைத் திறக்கவும் அழைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கோரினர்.

ஆர். டி. டுபே என்ற சோஷலிஸ்டு உறுப்பினர் இதுபற்றிப் பேசுகையில், அந்த மந்திரிகள் இருவரையும் அவமதிக்கும் நோக்கம் எதிர்க்கட்சியினருக்கு இல்லையென்றும், காங்கிரஸ் கட்சியினர் இம்மாதிரி திறப்பு விழாக்களுக்கு மந்திரிகளையே அழைப்பது என்று கொண்டிருக்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டுமென்பதற்காகவே வேறு இருவரை அழைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கோருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இம்மாதிரி நிகழ்ச்சிகளைச் சிறப்பிக்க வேறு அறிவாளிகளை ஏன் அழைக்கக்கூடாது என்றும் அவர் கேட்டிருக்கிறார்.

வி. ஆர். தம்தெரே என்ற சுயேச்சை உறுப்பினர் எழுந்து, 'இம்மாதிரி விஷயங்களில் சபையினர் ஒருமுகமான முடிவெடுக்க வேண்டும்' என்று என். வி. காட்கில் கூறியுள்ள அறிவுரையைக் குறிப்பிட்டு, அதிகாரப்பற்றற்ற கூட்டத்தில் இதுபற்றி விவாதித்து, பின்னர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக முடிவுகளை மேற்கொள்ளுதல் நலமென்றும் கூறினார்.

என்றாலும், எதிர்க்கட்சியினர் பிரரேபித்த பெயர்களை காங்கிரசார் நிராகரித்துவிட்டது குறித்து அவர் வருத்தம் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் பேசிய யூ. என். தாவ்லே, "எதிர்க்கட்சியினர், டாக்டர் அம்பேத்காருக்கும் ஜகதாப்பிற்கும் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்களோ அத்தனை மதிப்பை காங்கிரஸ்காரர்களும் வைத்திருக்கிறார்கள்; அவர்களைப் பெருமைப்படுத்த வேறு திட்டங்கள் தந்தால் அவற்றை ஏற்றுக் கொள்ள நாங்கள் விரும்புகிறோம்," என்று குறிப்பிட்டாராம்.

காங்கிரஸ்காரர்கள் கோரிய தீர்மானம் நிறைவேறியது. 15 பேர் ஆதரவாகவும், 10 பேர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர் எனத் தெரிகிறது.

1953 அக்டோபர் மாதத்திலிருந்து 1954 மார்ச் வரையுள்ள காலத்தில், தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் திட்டத்துக்காக, பொது மக்கள் தேக உழைப்பின் மூலம் சுமார் ரூ. 22,57,880ம், ரொக்கமாகவும், பொருளாகவும் சுமார் ரூ. 23,47,710ம் அளித்திருக்கின்றனர்.

கொள்ளையரை அடக்க கூட்டு முயற்சி!

சாம்பல் நதிதீரத்தில் போலீசார் நடவடிக்கை

கொள்ளையருக்கு கிராமத்தவர்பாதுகாப்பளிக்கிறார்களாம்

குவாலியர், ஜன. 21—

மத்திய பாரத், உத்திரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களைச் சேர்ந்த போலீசார், சாம்பல் நதி தீரத்தில் சுமார் **60,000** சதுர மைல்களில், மறைந்திருக்கும் கொள்ளைக் கூட்டத்தினருக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளை கூட்டாக மேற்கொள்வர் எனத் தெரிகிறது.

காங்கிரஸ்காரர்களில் சிலர், அந்த கொள்ளைக்காரர்களைக் கண்டுபிடிக்கச் செய்த சமாதான முயற்சிகள் தோல்வியுற்று விட்டன என்று கூறப்படுகிறது.

காணாது போய்விட்டனர் எனக் கூறப்படும் கொள்ளைக்காரர்களில் 34 பேர்கள் கடந்த நவம்பர் 6-ந் தேதியன்று சரணடைவார்கள் என்று கூறப்பட்டது. ஆனால் அவர்கள் இன்னும் போலீசாரை ஏமாற்றிக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

பைண்ட் பகுதி காங்கிரஸ் தலைவர், இந்த கொள்ளைக்காரர் பிரச்சினையைத் தீர்க்க தமது சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பில்லை என்றே கருதுகிறாராம்.

போலீசாருக்கு உதவியாக எல்லாக் கட்சியினரும் இருக்க வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்ட சர்வ கட்சி மாநாட்டின் நோக்கம் ஈடேறவில்லை என்றும் தெரிகிறது. மாறாக, போலீசாருக்கு எதிரான இயக்கம் வலுத்து வருவதாயும், போலீசாரின் கொடூர அடக்குமுறை போக்கிற்கு எதிர்ப்பு வலுத்து வருவதாயும் கூறப்படுகிறது.

கொள்ளைக் கூட்டத்தினர் போலீசார் மீது பலமான தாக்குதல்கள் நடத்தி வருகின்றனராம்.

ஜனவரி முதல் வாரத்தில் மட்டும் 18 போலீசார் கொல்லப்பட்டிருக்கின்றனராம்.

கொள்ளைக்காரர்களுக்கு கிராம மக்கள் பாதுகாப்புத் தருவதாயும், கொள்ளைக்காரரைப் பிடிப்பதில் போலீசாருக்கு உதவ வேண்டிய கிராம மக்கள் அவர்களுக்கு தவறான வழி காட்டிவிடுவதாயும், கொள்ளைக்காரர்களைத் தப்புவிக்க, கிராம மக்கள் போலீசாரைச் சூழ்ந்துகொண்டு, அவர்களை நகரவிடாது செய்துவிடுவதாயும் மாவட்ட நீதிபதி ஒருவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் காணப்படுகிறது.

கொள்ளைக் கூட்டத்தவரின் தலைவர்களில் ஒருவரான தெசில்தார் சிங் என்பவரைக் கைது செய்ததற்குப் பழிவாங்கும் நோக்கத்துடன் கொள்ளைக்காரர்கள் தீவிரமான தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனராம்.

இரண்டு மாநில மந்திரிகளும், போலீஸ் அதிகாரிகளும் கூடிப் பேசி, கொள்ளைக் கூட்டத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்று தெரிகிறது.

கொலாபா—பம்பாய் :

14—1—55ல், இந்து ஓட்டலில் பொது மக்களுக்கு கழகச் சார்பாக தேநீர் வழங்கப்பட்டது. பின்னர், இரவு 8½ மணிக்கு கூபரேஜ் திடலில் தோழர் எஸ்.கே.ராசு தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ஏ. எஸ். அன்பரசு, கே. கே. ராமநாதன், கே. எஸ். செகநாதன், எஸ். பி. பெருமாள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பால்வாடி—பம்பாய் :

14—1—55ல், புதுச்சால் பால்வாடி குடியிருப்போர் கமிட்டியின் சார்பில், பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. தோழர் எஸ். டி. ராஜ் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் ஏ. எல்.பெருமாள் எல்லோரையும் வரவேற்றுப் பேசியதும், தோழர்கள் எஸ். தியாகராசன், எஸ். வள்ளி நாயகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொய்சேர்—பம்பாய்

திராவிடமணி உணவு விடுதியின் சார்பில், 16—1—55 மாலே 5-30 மணிக்கு தோழர் எம். எஸ். மாடசாமி ஆரம்பித்து வைக்க, தோழர் எஸ். சுப்பையா வரவேற்புரையாற்ற, தோழர் ஆர். வேதமுத்து தலைமையில், தோழர்கள் ஆ. ராமசாமி, து. சே. அருணசலம், கே. ஆர். பொன்னுசாமி, சி. ரா. அறிவீரன் சொற்பொழிவாற்றினர். எல்லோருக்கும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது

புதுவை :

16—1—55 மாலே 6 மணிக்கு கழகக் கட்டிடத்தில், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது. இன்னிசைக் கருவிகளுடன் திராவிட இயக்கப் பண் பாடப்பட்டது. பின், தோழர் மு. கருணாநிதி எழுதிய 'தூக்குமேடை' ஒலி நாடகமாக நடைபெற்றது.

சோழவந்தான் :

15—1—55ல், தங்கராசு நினைவுசைப் பந்தாட்டக் கழகத்தில், தோழர் என். கருப்பப் பிள்ளை தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது. வெற்றி பெற்ற மூன்று குழுவினருக்கும் தலைவர் பரிசளித்தார். பின்னர், தோழர்கள் ஆர். பழனிச்சாமி, கு. குருநாதன், கி. மாரிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருப்பூர் :

14-1-55ல், தி.மு. கழக சார்பில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலே 7 மணிக்கு வள்ளுவர் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் விருதை ந. இராமசாமி 'திராவிடர் திருநாளும் – தி. மு. கழகமும்' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர்.

முகவூர் :

14—1—55 காலே 7 மணிக்கு, தோழர் சு. மாரிமுத்து தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது. ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கட்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. பல பெரியோர்கள் 'பொங்கல் விழா' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

இனம்கரிசல்குளம் :

14—1—55ல், திராவிடர் திருநாளும், தி. மு. கழக முதலாண்டு விழாவும் தோழர் க. முத்தச்சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் "தமிழர் திருநாளும் நமது கழகமும்" என்பது பற்றி பேசினர். பின்னர் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : மா. சண்முகசுந்தரம்; பொருளாளர் : ஆ. கருப்பையா; விளம்பர உறுப்பினர் : ச. மகாலிங்கம்; மாவட்டப்பிரதிநிதிகள் : ச. பாலகுருசாமி, கி.அ. நாச்சியப்பன். பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவ்வாண்டு நிறைவுவிழாவின் நினைவாக 'நம்நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது —வரப்பெறும்-நன்றி-பொருளாளர்.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

சென்னை :

இராயப்பேட்டை 37-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில் 14—1—55 காலே 8 மணிக்கு விழாவையொட்டி கொடியேற்றுவித்து, தோழர் ஏ. எல்.கே. சாமி தலைமையில் தோழர்கள் பொ. ஏழுமலை, கிருஷ்ணமூர்த்தி, ஞானசேகரன், மு. அரங்கநாதன் ஆகியோர் பொங்கல் விழா பற்றி சொற்பொழிவாற்றினர். பின்னர் 400-க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

* * *

16—1—55 காலேயில், சூளை ஊ. ப. அ. சௌந்திரபாண்டியன் நினைவுப் படிப்பகத்தில், 'தமிழன் பண்பு' என்பது பற்றி பல தோழர்கள் பேசினர். பகல் 12 மணியளவில் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது. மாலே 6 மணியளவில் தோழியர் அலமேலு அப்பாதுரை தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழியர் அருண்மொழி, தோழர்கள் டி. வி. நாராயணசாமி, டி. என். இராவணன் மற்றும் பலரும் பேசினர். 17—1—55 காலே 7 மணியளவில் வ. சுந்தரம் குழுவினரால் நாதஸ்வரம் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. இரவு சுமார் 10 மணியளவில் தோழர்கள் சுப்பராமன், கோவிந்தன் குழுவினர் இசை வழங்கினர்.

* * *

14—1—55 காலே 9 மணியளவில் சூளை முத்தையா நினைவுப் பள்ளியில் திரு. மு. கல்யாணசுந்தரம் தலைமையில், விழா, கழகக் கொடியேற்றலுடன் ஆரம்பித்த பள்ளியில் நடந்த போட்டிகளில் வெற்றி கண்ட மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டபின் இறுதியில் அனைவருக்கும் பொங்கலும் தேநீரும் வழங்கப்பெற்றது.

* * *

14—1—55ல், மயிலே 44-வது வட்ட தி. மு. கழக பணி மனையில் (2, அரங்கநாதபுரம்தெரு) தோழர் சிந்தனைச் செழியன் தலைமையில் விழா நடைபெற்றது. காலே 8 மணிக்கு தோழர் பி. எம். மதியழகன் கொடியேற்றினர்; பின்னர், 30 சிறுவர்களுக்குமேல் பால் விளி யோகம் செய்யப்பட்டது. 10 மணிக்கு நொச்சிநகர் கோலாட்டக் குழு சிறுமிகளின் கோலாட்டம் நடைபெற்றது; 11 மணிக்கு 'திராவிடர் திருநாள்' என்னும் பொருள் பற்றி பல தோழர்கள் பேசினர். பிற்பகலில் ஏழை மக்களுக்கு குயப்பேட்டையில் 400 பேருக்கு மேலும், கழகப் பணிமனையில் 300 பேருக்கு மேலும் கஞ்சி வார்க்கப்பட்டது.

பெரியகுளம் :

14—1—55-ல், வடகரை இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் 10-வது ஆண்டு விழாவும், திராவிடர் திருநாளும் தோழர் அக்குலே அமைமையில் நடைபெற்றது. தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி 'திருநாள் என்?' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

அரிமளம் :

15—1—55-ல் தி. மு. கழகச் சார்பில் தோழர் சௌந்தராசன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் மீ. சு. இளமுருகு-பொற்செல்வி "பொங்கலும் நாமும்" எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளையும் வழங்கினர்.

அறந்தாங்கி :

16—1—55-ல், தி. மு. கழக ஆதரவில் தோழர் கர்ணு தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் மீ. சு. இளமுருகு-பொற்செல்வி 'திராவிடரியக்கமும்--திருநாளும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். கட்டுரை, கவிதை, வீர விளையாட்டுகளில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர்.

புதுக்கோட்டை (நெல்லை மாவட்டம்) :

16—1—55ல் தி. மு. கழகச் சார்பில், வி. வி. டி. மைதானத்தில் தோழர் இராயப்பன் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அருணசலம், இரா. சு. தங்கப்பழம், எம். இரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காகி (பூனு)

15—1—55 மாலே 6½ மணிக்கு தமிழர் கழகச் சார்பில், காகி—ரேஞ்ஜ் ஹில்லில் தோழர் பி. எம். இராமசாமி தலைமையில் பொங்கல் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். ஏ. வேதகிரி பொங்கல் பற்றி பேசினர். தோழர் பி. எம். முத்து குழுவினரால் 'சின்னதுரை' நாடகமும், தோழர் எஸ்.ஆர். சங்கர் 'பொங்கல் நடனமும்,' தோழர்கள் பி. எம். பழனிவேலன், எம். டி. ஜே. லாரன்ஸ் ஆகியோரது 'பொய்க்கால் குதிரை' நாட்டியமும், தோழர் எம். ஆர். துரைராஜ் குழுவினரின் 'மறுஜென்மம்' நாடகமும் நடைபெற்றன.

குன்றை :

17—1—55ல், தி. மு. கழகச் சார்பில், அண்ணு திடலில் பொங்கல் விழா நடைபெற்றது. பொது மக்களுக்கு உணவு அளிக்கப்பட்டது.

கொரநாட்டுக் கருப்பூர் :

16-1-55-ல் விழாவையொட்டி காலேயில் தோழர் கோ. பொன்னுசாமி தலைமையில் போட்டிகள் பந்தயங்களும், மாலே 4 மணிக்கு ஜனுப் கா ஆ. ரஜாக் தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் இலட்சுமணன், கே. சந்திரசேகரன், க. தியாகராசன், சைபுதீன், நா. ஞானசுந்தரம், கே. சுப்பையன், இரா. சங்கரன் ஆகியோர் பேசினர். போட்டிகளில் வெற்றி பெற்ற தோழர்களுக்கு தோழர் தாண்டவராயர் பரிசுகள் வழங்கினர்.

மாராந்தை :

15—1—55 மாலே 2 மணியளவில், தோழர் இரா. வேலாயுத பாண்டியன் தலைமையில், வீர யாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. வெற்றி பெற்றோருக்கு தோழர் சி. சுப்பிரமணியன் பரிசு வழங்கினர். இரவு 7-30 மணியளவில், தோழர் இ. அருணசலம், காளியப்பா குழுவினரின் மேளக் கச்சேரியோடு தோழர் சௌதை மா. சிவனு தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர் அ. பழனியப்பன் கழகக் கொடியேற்றினர். பின்னர் தோழர்கள் என். பி. எம். அப்துல் காதர், சு. கந்தசாமி, மு. பொற்செழியன், மு. க. சுப்பையா, சு. அ. துரை முதலியோர் பொங்கல் விழா பற்றியும், கழகக் கொள்கை பற்றியும் விரிவுரையாற்றினர்.

கடம்பத்தூர் :

18—1—55 இரவு 7 மணிக்கு, தோழர் வ. பாலசுப்பிரமணியம் தலைமையில், தி. மு. கழகச் சார்பில் பொங்கல் விழாக் கூட்டம் இனிது நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அன்று இரவு நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் முக்கிய முடிவுகள் பல செய்யப்பட்டன.

பெங்களூர்-இலக்குமணபுரி

14—1—55 காலே 9 மணிக்கு, தோழர் கே. ரேணு அவர்களால் கழகக் கொடியேற்று விழா நடைபெற்றது. மாலே 5-30 மணிக்கு, தோழர் மா. மன்னர் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் ஏ. எம். தாண்டவம், ஜி. எஸ். அன்னியப்பன், மு. அரங்கசாமி, வி. அண்ணுமலை ஆகியோர் 'பொங்கல் விழா' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். சிறுவருக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

எருமப்பட்டி :

17—1—55 மாலே 5 மணிக்கு விழாவையொட்டி கழகக் கொடிகள் கட்டப்பட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட காளே மாடுகளுடன் மிகச் சிறப்பான முறையில் ஊர்வலம் நடைபெற்றது. இரவு 8½ மணிக்கு தோழர் எம். சரீப் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் சி. என். இராசன் அவர்கள் குழுவினரால் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

வெள்ளைக்கோட்டை :

16—1—55 காலே 10 மணிக்கு பாரதிதாசன் தெருவில், பகுத்தறிவு மன்றச் சார்பில்! நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர் எம். எஸ். இராமசாமி கழகக் கொடியேற்றுவித்துச் சொற்பொழிவாற்றினர். அவருக்கு மன்றச் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. பின்னர் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கோவிலடி -

14—1—55 மாலே 4 மணிக்கு, தோழர் கா. பெரியசாமி தலைமையில் திருவள்ளுவர் கழகச் சார்பில் வெகு சிறப்பான முறையில் உழவர் ஊர்வலம் நடைபெற்றது மாலே 6½ மணிக்கு திருவள்ளுவர் கழகம், தி. மு. கழகம் ஆகியவை சார்பில் தோழர் எம். கதிரேசன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் அன்பில் தருமலிங்கம், ம. தமிழ்த்தாசன், சி. சிலம்பின்செல்வன் ஆகியோர் பல பொருட்களில் சொற்பொழிவாற்றினர்.

பெத்தநாய்க்கன்பாளையம் :

17—1—55 காலே, தி. மு. கழகத் தோழர்கள், பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்களின் உருவப்படத்தை நன்ருக அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் வைத்து, ஒலிபெருக்கியுடன் ஊர்வலம் வந்தனர்.

புலியகுளம் (கோவை)

12—1—55 காலே 6 மணிக்கு தோழர் எம். கிருட்டிணன் தலைமையில், பாத்ரும் மைதானத்தில் தோழர் இரா. காசிமுத்து கழகக் கொடி ஏற்றினர். பின்னர், தோழர் கே. காசிநாதன் பொங்கல் விழா பற்றி விரிவுரையாற்றினர்.

சலகண்டபுரம் :

15—1—55 காலேயில் பொங்கல் விழா நிகழ்ச்சிகளும், மாலே 6 மணிக்கு தோழர் ப. கண்ணன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் புதுமைவாணன், சிற்றுளி சுப்பிரமணியம், ந. இளங்கோ, டி. கே. குருநாதன் ஆகியோர் சொற்பொழிவும் நடைபெற்றது.

குகை—சேலம்

15—1—55 மாலே 6 மணிக்கு இரா. பெரியசாமி தலைமையில் 'கலையும் பொங்கலும்' என்பது பற்றி விருதை ந. இராமசாமி, கே. ஏ. அன்புக்கரசு, சி. இளம்பருதி ஆகியோர் பேசினர். சிறுர்களுக்கு இனிப்பும் பொங்கலும் வழங்கப்பட்டது.

முல்லைவாடி :

16—1—55 காலே 10 மணிக்கு கழகச் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தின் போது தோழர் மா. மணி கழகக் கொடி ஏற்றினர். இறுதியில் சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பெங்களூர்-அக்கிபேட்டை

தி. மு. கழக கட்டிடத்தில், தோழர் வி. கே. நடேசன் தலைமையில், விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் சி. என். சாமி, ஆர். ஆறுமுகம், டி. துரைசாமி, ஏ. கங்காதரன், எ. முருகேசன், ஜே. கனகசுந்தரம், ஜி. கிருட்டிணன் சங்கரன், சி. உலகநாதன் ஆகியோர் விழாப்பற்றி பேசினர். பின் சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

விருதுநகர் :

16—1—55 காலே 3 மணிக்கு 22-வது வார்டு வி. வி. இராமசாமி படிப்பக சார்பில் விழா கொண்டாடப்பட்டது. மேளவாத்தியத்துடன் முக்கிய தெருக்களில் ஊர்வலமாக வந்து, படிப்பகத்தில், தோழர் மரியசிங்கம் தலைமையில், தோழர்கள் ரத்தினசாமி, காகப்பன், யாக்கோபு, தாஸ், பாக்கியம் ஆகியோர் பேசினர். பின்னர், 300 சிறுவர்களுக்கு பொங்கல் வழங்கப்பட்டது.

வேலூர் (சேலம்)

15—1—55 மாலே 5 மணிக்கு வ. உ. சி. வாசகசாலேயின் சார்பில், தோழர் எம். கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் வி. எஸ். சதாசிவம், வி. எ. இராமநாதன், எம். சுப்பிரமணியம், இரா. சண்முகம், வி. கே. இராசு, டி. எம். முத்துசாமி, நாவரசன் ஆகியோர் 'பொங்கல் விழாவும் தமிழர் கடமையும்' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர். 'ஈட்டி முனை' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு இரா. சண்முகம் பரிசு வழங்கினர்.

* * *

14—1—55 மாலே 6 மணிக்கு அழகிரி திடலில், மாணவ மன்றச் சார்பில், தோழர் டி. பி. எஸ். பழனிச்சாமி தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது. தோழர்கள் முனுசாமி, அழகிரிசாமி, காவரசன், லோகநாதன் ஆகியோர், 'தேன்—தென்றல்—தீ' என்ற தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர்.

குமாரசாமிப்பட்டி :

16—1—55ல், தோழர் பி. என். அம்மச்சி கவுண்டர் எம். சி. தலைமையில், தோழர் ஆர். கதிர்வேல் ஏராளமானவர்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கினர். மாலே ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சித்தூர் :

16—1—55ல், அறிவு வளர்ச்சி கழகச் சார்பில், தோழர் ஆர். கே. கோபால்சாமி தலைமையில், காமாட்சி தியேட்டரில் விழா நடைபெற்றது. தோழர் க. ஏகாம்பரம் பேசியபின், தோழர் ஆர். நாதன் மலேயாள மொழியில் பொங்கல் விழாவின் சிறப்புப் பற்றிப் பேசினர். தோழர் அ. சு. வெங்கடாசலம் இசை விருந்தளித்தார். பின்னர் இரவில், சங்கப் பகுத்தறிவுக் குழுவினரால் 'பூமாலே' நாடகம் நடிக்கப்பட்டது.

கோமல் :

19—1—55 மாலே 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், தோழர் சு. கோ. வாசன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் என். வி. நடராசன், என். சி. பன்னீர் செல்வம், கே. எஸ். சவுந்தரராசன் ஆகியோர் 'திராவிட மக்களும் பொங்கல் விழாவும்' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர்.

குனியமுத்தூர் :

15—1—55ல், தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. ஏ. பழனியப்பன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் சி. டி. தண்டபாணி 'பொங்கல் விழா திராவிடர் திருநாள்' என்பதைச் சுட்டிக் காட்டி சொற்பொழிவாற்றினர்; பேச்சு, பாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது.

சிந்திரியில் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி

சிந்திரி ரசாயன உற்பத்திசாலேயில் 1954 அக்டோபர் மாதத்தில் மொத்தம் 80,001 டன் அம்மோனியம் சல்பேட் உற்பத்தியாகியது; இந்தத் தொழிற்சாலே மூன்றுண்டுகட்கு முன்பு உற்பத்தி துவங்கியதிலிருந்து வேறெந்த மாதத்திலும் இவ்வளவு அதிகமாக உற்பத்தியானதில்லை.

பின்தள்ளப்பட்ட மக்களின் மனப்போக்கு.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"அரசாங்கப் பதவியாலும், அரசியல் கலப்பாலும்தான் பின்தள்ளப்பட்ட சமுதாய மக்களுக்கு விமோசனம் ஏற்படும். வெறும் மாநாடுகளாலும், தீர்மானங்கள் நிறைவேற்றுவதாலும் ஆகப்போவது ஒன்றுமில்லை."

"பின்தள்ளப்பட்ட மக்களின் பலத்தைப் பெருக்கி, அவர்கள் துன்பத்தைத் துடைக்க, ஆண்டுக்கு ஒருமுறையோ, இருமுறையோ, ஒவ்வொரு மாவட்டத்திலும், இத்தகைய மாநாடுகளை நாம் கூட்ட வேண்டும்."

—எஸ். எஸ். இராமசாமி படையாச்சி

150 உட்பிரிவுகளுக்குக் குறையாத பின் தள்ளப்பட்ட சமூகத் தலைவர்களின் மாநாடு, இன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில், எஸ். சுயம்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் தேஷ்முக் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"அரசியல் நிர்ணய சபை நடைபெற்ற காலத்தில் பின்தள்ளப்பட்ட மக்களைப் பற்றிப் பேச சுமார் 6 பேர்களுக்கு மட்டுமே 'உள்ள உரம்' இருந்தது; அநேகர், அந்த மக்களின் முன்னேற்றத்திற்கு ஏதேனும் செய்யப்பட வேண்டும் என்பதை உணர்ந்தார்கள்; ஆனால், அவர்கள் எல்லோரும் எங்கே 'வகுப்புவாதிகள்' என்ற குற்றச்சாட்டிற்குத் தங்களை ஆளாக்கிவிடுவார்களோ என்று அஞ்சிக்கொண்டிருந்தனர்.

இன்றுள்ள சூழ்நிலையில், அரசியல் சட்டத்தில் பின்தள்ளப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக உள்ள சிலவற்றிற்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இதைக்காட்டிலும் இன்னும் முன்னேற்றம் வேண்டுமென அன்று வற்புறுத்தியிருந்தால் இப்போது கிடைத்திருக்கிறவைகூட கிடைக்காது போயிருக்கலாம்.

பின்தள்ளப்பட்ட வகுப்பு மக்கள் சென்னை மாநிலத்தில் வெகுவான முன்னேற்றம் கண்டிருப்பது பாராட்டலுக்குரியதாகும். சமுதாயப் புரட்சி சென்னையில் தான் தோன்றியது; அதன் பிறகே அப்புரட்சி வடக்கே சென்றது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

பின்தங்கிய வகுப்பு மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள விரும்பாதோர் இன்றுகூட இருக்கிறார்கள். அவர்கள் சற்று பொறுமையுடன் சிந்தித்துப் பார்த்தால், பின்தள்ளப்பட்ட மக்களின் கோரிக்கைகள் வெகு நியாயமானவை என்பது புரியும். அவர்கள் நியாயமற்ற, தேச விரோதமான, நாட்டுப்பற்றற்ற கோரிக்கைகள் எதையும் கோரவில்லை என்பது தெளிவாகும்."

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

'யாராவது ஜாதியின் அடிப்படையில், அரசியலில் நுழைந்தால் அவர்கள் தோல்வியுறுவது நிச்சயம். அநேக சந்தர்ப்பங்களில், ஒருவரை அவரது சாதிப் பெயரால் குறிப்பிடுவதே அவருக்கு ஒரு தண்டனை போன்றதாகும்; என்றாலும், இந்த தாழ்ந்த மக்களை, 'சாதி உணர்வு கொண்டவர்கள்' என்று குற்றஞ் சுமத்துவது, நாகரீகமாகிவிட்டிருக்கிறது. பின்தள்ளப்பட்ட வகுப்பு மக்கள் சாதி வெறியர்கள் என்றோ, வகுப்புவாதிகள் என்றோ குற்றஞ் சுமத்த முடியாது; ஏனெனில், இந்த மக்கள், சாதிப் பாகுபாடுகளின் தண்டனைகளை மட்டுமே அனுபவித்து வருகிறார்களேயன்றி, சாதிப் பாகுபாடுகளின் நன்மைகளை அனுபவிக்கவே இல்லை."

★

அறிவிப்பு

22—1—55 அன்று, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மாஜி இராணுவத்தினர் கவனிக்க!

சென்னை சர்க்கார் ஒரு விசைத் தறி ஆலையை முன்னாள் இராணுவத்தினருக்காகக் கட்ட பரிசிலனை செய்துவருவதாலும், கோவை நெசவாளர் கூட்டுறவு ரிஜிஸ்திரார் கைத்தறி அனுபவம், விசைத்தறி அனுபவம், இனிமேல் இத்தொழிலில் விருப்பமுள்ளவர்கள் ஆகியவற்றின் தகவல்கள் தமக்குத் தேவைஎன்பதாலும், உடனே முன்னாள் இராணுவத்தினர்கள் 25—1—55-ந் தேதிக்குள் கீழே கண்ட முகவரிக்குத் தகவல்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் :—

செயலாளர், முன்னாள் இராணுவத்தினர் சங்கம், சூலூர், (கோவை)

கோசி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப்பொழுது கட்டப் பட்டுவரும் பீகார் மாநிலத்தின் 'சோக நதி'யான கோசி நதி, ஆண்டுதோறும் 20,000 சதுர மைல் பரப்பளவுள்ள நிலத்தை பாழ்படுத்தி வந்தது.

பம்மல் தமிழர் மன்றம்

பொங்கல் விழா பொதுக்கூட்டம் **23-1-55** மாலை **5-30** மணிக்கு, பல்லாவரத்திற்கடுத்த பம்மல் மந்தவெளிக்கருகில், பம்மல் தமிழர் மன்றத்தின் சார்பில் பொங்கல் விழா பொதுக்கூட்டம் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் எம். கே. நவநீதம், ஏ. எல். பாருக்கி ஆகியோர் பேசுவர்.

நாகரீகமிக்கவர் நாட்டில்!

கைகாட்டியை உடைத்தனர்; ரயிலை நிறுத்தினர்

ஆசிரியரும் மாணவரும் அடங்கிய கூட்டத்தின் ஆர்ப்பாட்டம்

லக்னோ, ஜன. 19—

ஆசிரியர்கள், மாணவர்கள் அடங்கிய கூட்டமொன்று, ரயில் நிலையமொன்றிலிருந்த கைகாட்டியை உடைத்து, ரயிலை நிறுத்தி அதில் ஏறிக்கொண்டு, பின்னர் தாங்கள் இறங்கவேண்டிய இடத்தில் வண்டியை நிற்கச் செய்ய அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து வண்டியை நிறுத்தி இறங்கியதாக செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.

இரண்டு ஆசிரியர்கள், 5 மாணவர்கள் உட்பட 26 பேர் மீது இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்; இதரர்கள், நிலவிய காரிருளில் காணப்பட முடியவில்லையாம்.

ஹாரொனி என்னுமிடத்தைச் சேர்ந்தவர்கள் — மாணவர்களும், ஆசிரியர்களும் உட்பட, குசும்பி எனும் இடத்தில் நடைபெற்ற திருவிழாவினைக் காணச் சென்றிருந்தனர்; திருவிழா முடிந்ததும் உடன் வீடு திரும்ப அவர்கள் ஆவல்கொண்டு குசும்பி ரயில் நிலயத்திலிருந்த "ஸ்டேஷன் மாஸ்டரி"டம் சென்று, வருகிற 'துரித வண்டி'யை (எக்ஸ்பிரஸ் ரெயில்) அந்த ஸ்டேஷனில் நிறுத்தித் தருமாறு கேட்டனர்; அவர் மறுத்து விடவே, இந்தப் பெருங் கூட்டம், அந்த ரயில் நிலயத்திலிருந்த கைகாட்டியை உடைத்து நொறுக்கிவிட்டு, வந்துகொண்டிருந்த துரித வண்டியை நிறுத்தி அதில் ஏறிக் கொண்டனராம். வண்டி, இந்தக் கூட்டம் இறங்கவேண்டிய ஹாரொனி ரயில் நிலயத்தை நெருங்கும்போது சங்கிலியைப் பிடித்திழுத்து, வண்டியை நிறுத்தி, கூட்டத்தவர் பலர் இறங்கி ஓடிவிட்டார்களாம். வண்டி வேகமாகப் புறப்பட்டு வழக்கமாக நிற்கவேண்டிய இடமான அமாசி நிலயம் சென்று நின்றதாம் அப்போது வண்டியிலிருந்த அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த 26 பேர்கள் பிடிக்கப்பட்டார்களாம்.

இலங்கையில் தமிழரை தூதுவராக நியமிக்கவும்!

தாழ்த்தப்பட்டோருக்குத் தரும் வசதிகள் அத்தனையும் தரவேண்டும்

தோழர் சுயம்பிரகாசம், எம். எல். ஏ., தலைமையுரை

"இலங்கையில் வாழும் இந்தியர்களில் பெரும்பாலானோர், பின்தள்ளப்பட்ட வகுப்பினராக உள்ள தமிழர்கள்; அங்கு அவர்கள் நிலை மிக மோசமாகி இருப்பது கண்கூடு. மத்திய அரசாங்கம், இலங்கையில், இந்தியாவின் தூதுவராக, பின்தள்ளப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழரை நியமிக்க வேண்டும். மேலும், மாநில அரசாங்கம், இங்குள்ள பின்தள்ளப்பட்ட மக்களின் பிரதிநிதிகளடங்கிய நல்லெண்ண தூதுக் குழு ஒன்றை, இலங்கை இந்தியரின் உண்மை நிலையை அறிந்துவரும்பொருட்டு அனுப்பி வைக்க வேண்டும்,"

—என்று, பின்தள்ளப்பட்ட வகுப்பு மக்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தோழர் சுயம்பிரகாசம், எம்.எல்.ஏ., குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"மாநில அரசாங்கத்தில் வேலைக்கு அமர்த்திக்கொள்ளும் விஷயத்தில், குறிப்பிடப்பட்ட வயது நிர்ணயத்தில், சில சலுகைகள், பின்தள்ளப்பட்ட வகுப்பு மக்களுக்குக் கட்டாயமாகத் தரப்படவேண்டும். உண்மையில், இன்று அரிசனங்களுக்கு என்னென்ன வசதிகளும், சலுகைகளும் தரப்படுகின்றனவோ அவை அத்தனையும் பின்தள்ளப்பட்ட வகுப்பு மக்களுக்குத் தரப்பட வேண்டும்.

மத்திய அரசாங்கமும் வேலைக்கு ஆள் அமர்த்துவதில் பின்தள்ளப்பட்ட மக்களுக்கென இடங்கள் ஒதுக்கவேண்டும்

கள்ளர், மறவர், வன்னியர் போன்ற சில பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு இராணுவ பாரம்பரியம் இருக்கிறபடியால், அவர்களுக்கு இராணுவம், கடற்படை, விமானப் படை போன்றவைகளில் பணி புரிய சலுகைகள் தரப்படவேண்டும்.

மேலும், இந்த வகுப்பு குழந்தைகளுக்கு இலவசக் கல்வியும் வேண்டும்."

★

மார்ஷல் டிட்டோ

வருகையும் — புறப்பாடும்

சென்னை, ஜன. 22—

யூகோஸ்லாவிய குடியரசுத் தலைவர் மார்ஷல் ஜோசப் பிராஸ் டிட்டோ நேற்று காலை, பர்மாவிலிருந்து சென்னை வந்து சேர்ந்தார். சென்னைத் துறைமுகத்தில் அவருக்கு மகத்தானதோர் வரவேற்பளிக்கப்பட்டது.

முதன் மந்திரி காமராசர், கவர்னர் பிரகாசா ஆகியோர் டிட்டோவை வரவேற்றனர்.

பின்னர் டிட்டோ, கவர்னர் மாளிகை சென்று அங்கிருந்து சென்னை எழும்பூரில் உள்ள பொருட்காட்சி சாலை, பெரம்பூரில் உள்ள ரெயில்வே தொழிற்சாலை ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

பிறகு, ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்று, மாநாட்டிலும் சிறிதுநேரம் பேசினார்.

அடுத்து கவர்னர்; தமது மாளிகையில், டிட்டோவுக்கு ஒரு 'ராஜ உபசாரம்' நடத்தியிருக்கிறார். பண்டித நேரு, காமராஜர் உட்பட பல காங்கிரஸ் தலைவர்களும், உயர்தர அதிகாரிகளும் டிட்டோவுக்குத் தரப்பட்ட விருந்தொன்றில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

இரவு 11 மணியளவில் டிட்டோ தம் குழுவினருடன், விசேஷ ரயில் ஒன்று மூலம் பெங்களூர் பயணமானார் என்றும், கவர்னர் பிரகாசா அவரை வழியனுப்பி வைத்தார் என்றும் தெரிகிறது.

தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கிய தொகை அதிகமாம்!

நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் குற்றச்சாட்டு

"நாட்டின் மொத்த மக்கள் தொகையில் நான்கில் மூன்று பகுதியினர், பின்தள்ளப்பட்ட மக்களேயாவர்; எனவே, அவர்களுக்கான இந்த மாநாட்டினை, வகுப்புவாத எண்ணங்கொண்டதெனக் கூறுவது தவறானதாகும்; எல்லா மக்களும் சமநிலையில் இருந்தால்தான் அரசாங்கம் திருப்திகரமாக இயங்க முடியும்."

"அகில இந்திய அடிப்படையில் பின்தள்ளப்பட்ட வகுப்பு மக்கள் ஒன்று சேர்க்கப்பட்டு, அந்த மக்களின் எல்லாப் பிரிவினரின் நலன்களும் கவனிக்கப்பட்டாலன்றி, இந்த இயக்கம் விருத்தியடைய முடியாது."

—இவ்வாறு, மந்திரி மாணிக்கவேலு நாயகர் பின்தள்ளப்பட்ட வகுப்பு மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"பின்தள்ளப்பட்ட வகுப்பு மக்கள், அரிசனங்கள் ஆகியோரின் கல்வி முன்னேற்றத்திற்காக அரசாங்கம் ரூ. 1 கோடி ஒதுக்கியது; ஆனால், அத்தொகையில் ரூ. 10 லட்சம் மட்டுமே பின்தள்ளப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் தொகையில் நாலில் ஒரு பகுதி மட்டுமே உள்ள அரிசனங்களுக்கு அவ்வளவு பெரிய விகிதாசாரத்தில் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது அர்த்தமற்றதாகும்.

பம்பாய், திரு-கொச்சி போன்ற மாநிலங்களில், பின் தள்ளப்பட்ட மக்களின் நலன்களைக் கவனிக்க தனி மந்திரிகள் இருக்கிறார்கள். அதைப்போலவே வேறு எல்லா மாநிலங்களிலும் மந்திரிகள் நியமிக்கப்பட வேண்டும்."

மற்றொரு மந்திரியான ராமசாமி படையாச்சி பேசுகையில், "அரசாங்கத்தால்தான், பின்தள்ளப்பட்ட வகுப்பு மக்களின் நலன்கள் கவனிக்கப்பட முடியும்," என்றார்.

கழகக் கூட்டம்

★

புதியம்புத்தூர்

24—1—55 மாலை 7 மணிக்கு

பேசுவோர் :
க. அன்பழகன்
வே. அற்புதமணி
நா. சங்கரன்

சென்னை 1-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

23—1—55 காலை 9½ மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், (எண் 217, திருவொற்றியூர் ஹைரோட்) செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

பொங்கல் விழா

23—1—55 காலை 8 மணிக்கு சென்னை, பெரம்பூர் பாரக்ஸ் சரஸ்வதி தியேட்டர் அருகில், திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றத்தில் எம். வெங்கடேசன் தலைமையில் தோழர்கள் ஆர். டி. அரசு, சி. கே. நடேசன் ஆகியோர் பேசுவர்.

மாலை 5-30 மணிக்கு, எம். மாணிக்கம் தலைமையில் தோழர்கள் என். வி. நடராசன், முகவை ஆர். எஸ். பாண்டியன், ஜி செல்வபதி, சி. கே. நாராயணன் ஆகியோர் பேசுவர்.

* * *

23—1—55 காலை 8½ மணிக்கு, சென்னை 35-வது வட்ட தி. மு. கழகக் கொட்டகையில் (63-பி, ஆற்காட்டுச் சாலை, கோடம்பாக்கம்) தோழர் மதிவாணன் தலைமையில் நடைபெறும். அதுபோது திரு. வி. க. பள்ளிச் சிறுவர்களுக்கு பொங்கல் வழங்கப்படும்.

* * *

25—1—55 மாலை 6 மணிக்கு, சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை, காசி விஸ்வநாதர் கோயில் திடலில், திருவள்ளுவர் முத்தமிழ் கழகச் சார்பில் திராவிடர் திருநாள் பொதுக்கூட்டம் தோழர் மு. ப. புட்பரத்தினம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், கண்ணதாசன், காஞ்சி கல்யாணசுந்தரம், சி. ஆர். பாலசுந்தரம், டி. எம். முத்துவேலு ஆகியோர் பேசுவர்.

குடியாத்தம் தாலுக்கா தாழ்த்தப்பட்டோர் சம்மேளன அரசியல் மாநாடு

25—1—55 காலை 10 மணிக்கு, குடியாத்தம் ராஜா தியேட்டரில் மேற்படி மாநாடு தோழர் ஏ. ரத்தினம், எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெறும். திறப்பாளர்: தோழர் ஏ. ஜெயராமன், எம்.பி.; கொடி ஏற்றுபவர்: பி. எம். சாமிதுரை, எம்.எல்.ஏ. மாலை 6 மணிக்கு, ஆற்றில், தோழர் சி. ஏ. கண்ணன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் கே. எம். சாமி, ஆர். ஜார்ஜ், மற்றும் பல எம்.எல்.ஏ.-க்களும், எம்.பி.-க்களும் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,